### சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# மக்கள் முதல்வரின் மனிதநேய விழா!

## இன்று (04.3.2026) நடைபெறும் நிகழ்ச்சிகள் விவரம்!
## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!





*சென்னை, மார்ச் 4-*
*அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு வருமாறு:*

**மனிதநேயம் — 29**

***கரு சுமந்த பெண்மைக்கு நலம் செய்வோம்!***
***கதிரவன் வெற்றியால் வளம் செய்வோம்!***

நாள்: 04.3.2026, புதன்கிழமை, காலை: 11.00 மணி
இடம்: சிவாஞ்சிபவன், திருப்பள்ளித்தெரு.
**தலைமை: பா.கதிரவன், வட்டகழகச் செயலாளர்**
கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குபவர் - திரைக்கலைஞர். பூர்ணிமா பாக்கியராஜ், கவிஞர்.அனுக்கிரகா (பட்டிமன்றப் பேச்சாளர்)
**அன்புடன்: 54அ வட்ட திமுக, துறைமுகம் மேற்குப்பகுதி**

**மனிதநேயம் — 30**

***படைப்பாளரின் வாழ்வின் அங்கமானவர்!***
***படை நடத்தும் களத்தில் சிங்கமானவர்!***

நாள்: 04.3.2026, புதன்கிழமை, மாலை: 5.00 மணி
இடம்: ஹேம்ராஜ் பவன், ஓட்டேரி
**தலைமை: ப.தாயகம்கவி, எம்.எல்.ஏ கழக அமைப்பு துணைச்செயலாளர்**
கவியரங்கத்தலைமை
பேராசிரியர் அப்துல் காதர்
***கவியுரைப்போர்***
கவிஞர். கபிலன்
கவிஞர். பா. விஜய்
கவிஞர். தஞ்சை இனியன்
கவிஞர். தனிக்கொடி
கவிஞர். ஆண்டாள் பிரியதர்ஷினி
**அன்புடன்: 71, 71அ வட்ட திமுக திரு.வி.க.நகர் வடக்குப்பகுதி**

**மனிதநேயம் — 31**

***சான்றோர் போற்றும் தலைமகன்!***
***சரித்திரம் புகழும் தமிழ் மகன்!***

நாள்: 04.3.2026, புதன்கிழமை, மாலை: 7.00 மணி
இடம்: தங்கசாலை தெரு, அரசு அச்சகம் அருகில்.
**தலைமை: மா.ஜெய்சங்கர் வட்ட கழகச் செயலாளர்**
புகழுரைப்போர்
**திரு.ப.சிதம்பரம் எம்.பி**
முன்னாள் ஒன்றிய அமைச்சர்
திரு.கு.சுப்புராயன், எம்.பி (மாநில கட்டுப்பாட்டு குழுத்தலைவர், சி.பி.ஐ)
திரு. கம்பம் செல்வேந்திரன் (கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர்)
**அன்புடன்:**
**54, 54அ, 54ஆ வட்ட திமுக துறைமுகம் மேற்குப்பகுதி**
இவ்வாறு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

### தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்! 2026 தேர்தலில்

# கழக அரசின் சாதனைகளை துண்டுப் பிரசுரங்கள் மூலம் கடை கடையாக வழங்குவோம்!

### கவிஞர் காசிமுத்து மாணிக்கம் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றம்!








சென்னை, மார்ச் 4-
2026 தேர்தலில் கழக அரசின் சாதனைகளை துண்டு பிரசுரம் மூலம் கடை கடையாக விநியோகம் செய்வோம் என்று கவிஞர் காசிமுத்து மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம், அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில், மாநில செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில், மாநில நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தளபதி - கலைஞரின் விரிவு தளபதியிடம் இருக்கிறது - கலைஞரிடமிருந்த புரிவு பரிவு ஒன்றிய அரசிடமிருந்து அநீதி நேரக்கண்டால் எழும் இவரிடமிருந்து எரிவு - இவரால் தான் சரியான நேரத்தில் சரியான சமயத்தில் சரியானது சனநாயகத்துக்கு நேர்ந்த சரிவு தப்பாகுமா என்ன தமிழ் மக்களின் தெரிவு நீங்கியது அதன் நீண்ட கழுத்தில் பத்தாண்டுகளாக இருந்த நெறிவு இவருக்கும் வெற்றிக்கும் இனி இல்லை பிரிவு

என இந்தியாவே பாராட்டும் பண்பாட்டின் சிகரம் தமிழக முதல்வர் தளபதிக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறும் வகையில் தமிழகம் முழுவதும் மார்ச் மாதம் 1ஆம் தேதி பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிப்பது என்றும், அறுசுவை உணவு வழங்குவது என்றும், நலத்திட்ட உதவிகள் வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஒன்றிய அரசு நிதி தராமல், நெருக்கடி தமிழ்நாட்டிற்கு தந்த போதும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை அடுத்த ஆண்டு முதல் ரூ. 2,000 என அறிவித்தமைக்காகவும், முன்கூட்டியே திட்டமிட்டு ரூ.5,000 வழங்கியமைக்காகவும், 15 லட்சம் மக்களுக்கு கூடுதலாகவும் மொத்தம் 1 கோடி 30 லட்சம் மக்களுக்கும் வழங்கியமைக்காகவும், தமிழக முதல்வர், வள்ளலார் போல் வாடிய பயிர் கண்டு வாடிடும் தளபதி அவர்களுக்கு நன்றி கூறுகிறோம்.

வணிகர்கள் இடர் நீக்கிட 20,000 கோடிக்கு மேல் வரிகளை, கடன் நிலுவை வரிக்கடன்களை தள்ளுபடி செய்த பூமி பந்தின் அதிசய நிகழ்வு உலா வரும் தளபதிக்கு கோடான கோடி நன்றி அறிவித்தலை தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநகராட்சி, நகராட்சி, உள்ளாட்சி கடைகளின் குத்தகைக்காலம் 9 ஆண்டுகள் என்று இருந்ததை, 12 ஆண்டுகளாக உயர்த்தி வணிகர்களின் வாழ்வாதாரத்தை நிரந்தரமாக பாதுகாத்து வரும் தமிழக முதல்வர் தளபதிக்கு நன்றி கூறுகின்றோம்.

மக்களை பாதிக்கும் வகையில் செயல்படும் ஒன்றிய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், தர்மேந்திர பிரதான் செயல்களை கண்டிப்பதோடு நிதி ஒதுக்கி தந்திட வேண்டுகிறோம்.

முந்தைய ஆட்சி காலத்தில் முடக்கி வைக்கப்பட்டு இருந்த வணிகர்கள் நல வாரியத்தை மீண்டும் சீரமைத்து 20 வாரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை 30 ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

மே-5 தினத்தை வணிகர் தினமாக அறிவித்ததுடன், குடும்ப நலநிதி உதவித்தொகை 5 லட்சமாக உயர்த்திய முதல்வர் தளபதிக்கு நன்றி கூறுகிறோம்.

வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கான பட்டியலில் வரு வருமான வரி உள்ளவர்களுக்கு இல்லை என்பதை பரிசீலனை செய்திட வேண்டுகிறோம்.

தமிழ்நாடு அறிவித்தது போல ஒன்றிய அரசும் "புதிய சமாதான திட்டத்தை" அறிவித்து நீண்ட கால நீதிமன்றங்களின் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டுகிறோம்.

மூத்த முன்னோடிகள் அ.தி.மு.க.வில் இல்லை. அப்படியே இருந்தாலும் எடப்பாடி அவர்களை இருக்க விடுவதில்லை என்கிற கொள்கை வழிகாட்டுதல்படி சமீபத்தில் எடப்பாடியால் விலக்கப்பட்ட முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ் அவர்களை இருகரம் நீட்டி வரவேற்று, ஆரத் தழுவிய தமிழக முதல்வரை, திராவிடத்தின் அடையாளத்தை வரவேற்கிறோம்.

மதுபான கொள்கை வழக்கு என பொய் வழக்கு போட்டு, கொல்லைப்புறமாக பிடித்த டெல்லி ஆட்சியை கலைத்துவிட்டு, அங்கே மீண்டும் தேர்தல் நடத்தி "ஜனநாயகன்" படத்தைத் தான் விடவில்லை. ஜனநாயகத்தையாவது காப்பாற்றுங்கள் என ஒன்றிய அரசை வேண்டுகிறோம்.

பொய் வழக்கு வலையை உடைத்து வெளியே வந்த கெஜ்ரிவால், மணிஷ் சிசோடியாவை, கவிதாவை இருகரம் நீட்டி உள்ளத்தால் உறவாடி உவகையுடன் வரவேற்கிறோம்.

2026 தேர்தலை முன்னிட்டு வர்த்தகர்களுக்கு தி.மு.க.வின் தமிழக அரசு செய்த சாதனைகளை, துண்டு பிரசுரம் மூலம் கடை கடையாக சென்று விநியோகம் செய்வதுடன், தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்திட இந்த மூன்று மாதமும் உழைத்திட தீர்மானித்திருக்கிறோம்.

இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.






கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, பொன்னேரி சட்டமன்ற தொகுதி, மீஞ்சூர் பேரூர் திமுக சார்பில், பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ் உதயன் ஏற்பாட்டில் கேக் வெட்டி, 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கி மிக சிறப்பாக பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

# தகைசால் தமிழரும் – தமிழ்நாடு முதல்வரும்!

### 'கணையாழி' தலையங்கம்!




அரசியல் என்பது
அதிகார வெறிக்கான பாதை இல்லை!
மக்களுக்குத் தொண்டு செய்யும்
மகத்தான வாய்ப்பு என்று
நாம் வாழும் காலத்திலும்
வாழ்ந்து காட்டியிருக்கிறார்
தோழர் நல்லகண்ணு!

ஆடம்பர வாழ்க்கை இல்லை
ஆளுமைச் சண்டைகள் இல்லை
போராட்டக் களம் வளர்த்த
இளமையும் முதிர்ச்சியுமாக
நம் காலத்திய
அதிசயத் தலைவர்
தோழர் நல்லகண்ணு!

சிறை வளர்த்த சிந்தனைகள்,
மாற்றுக் கட்சியினரும்
மதிக்கும் எளிமை, நேர்மை,
அநீதிக்கு எதிரான போராட்டம் என்று
ஆளுமைப் பண்பால் வளர்ந்தவர்!

மனக்குறை இல்லா
மாண்புமிகு வாழ்க்கை ஒன்றை
வாழ முடியும் என்பதற்கு
வரலாறு ஆகியிருக்கிறார்!

குறைந்த கூலியில்
நீண்ட நேர உழைப்பு எனும்
தொழிலாளர் உரிமைச் சுரண்டலைக்
கண்டித்துப் போராடியவர்!

தனக்குச் சொந்தமாக
வீடு ஒன்று வேண்டாதவர்
வீடு இல்லா மக்களுக்காக
வீதியில் போராடியவர்!

நதி நீர் இணைப்புக்குப்
பாலமாய் நின்றவர்!
சுற்றுச் சூழலைக் காக்கும்
சமூகச் சூழலை உருவாக்கியவர்!

படிக்கவும் பேசவும் மட்டுமின்றிப்
பின்பற்ற வேண்டிய
வாழ்க்கையின் பாடமாக
வாழ்ந்து காட்டியிருக்கிறார்!

தனக்குக் கிடைத்த
கோடி ரூபாய் நிதியை மட்டுமல்ல
உடலையும் தானமாக்கி
மாணவர்களோடு
மக்களுக்கும் பாடமாகி இருக்கிறார்!

தோழர் நல்லகண்ணு
இலக்கு தெரிந்தவர்
வழி தெரிந்தவர்
வழி காட்டியவர்!

செயலில் வாழ்ந்த
தலைவர்கள் கொண்டாடும்
தோழமைக்கு உரியவர்!

பொருளுக்கு அலையும்
உலகில் அரசியலுக்கு
மெய்ப்பொருள் ஆனவர்!

மக்கள் மனமெனும்
சிகரங்களைத் தொட
பிரச்சினைகள் எனும்
பள்ளத்தாக்குகளில்
பக்குவம் பெற்றவர்!

தமிழ் உணர்வை
மதித்துப் போற்றியவர்!

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது
அறிஞர் அண்ணா அறிவித்து
அதன்பின்
முத்தமிழ் அறிஞர் கலைஞரால் தொடங்கப்பட்ட
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனப்
பேராசிரியர்களும் பணியாளர்களும்
ஓய்வூதியமின்றி
உளைச்சலில் இருந்தபோது
முதல்வர் கலைஞரின்
கவனத்திற்கு எடுத்துச் சென்றவர்!

ஒரு குரலில்
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பக்கம்
தலைமைச் செயலகத்தையும்
தமிழ் உலகையும் திரும்பச் செய்தவர்!
எப்படிச் செய்ய வேண்டும் என்று
பாடம் நடத்தாமல்
என்ன செய்ய வேண்டும் என்று
சிந்தித்துக் கொண்டிருந்தவர்!

அங்கீகாரத்திற்கு அலையாமல்
தனக்குத் தான்
நேர்மையாக இருந்தவரைத்
தலைமைப் பண்பு தேடி வந்தது!

தடைகளைக் கண்டுபிடித்து
முடக்கிப் போடாமல்
இலக்குகளைச் சென்றடையும்
வாய்ப்புகள் நோக்கிய
தீர்வுகளைக் கூறியவர்!

விளம்பர வேட்டையும்
வேட்கையும் இல்லாதவர்!

அவரது மதிப்பு
பதவிகளால்!
அளந்தறியப்பட முடியாதது

மக்கள் மனதில் பதிந்த
அவரது
கருத்துப் படிவம்!
கணக்கிட முடியாதது

எதை நம்புகிறேன் என்று
மக்களுக்கு எதிர்காலத்தைக் காட்டியவர்!

அரிய பண்புகளின்
கொள்கலனாக விளங்கிய
தோழர் நல்லகண்ணு அவர்களை
அவர்
வாழும் காலத்திலேயே
தகைசால் தமிழர் என்று
அடையாளப்படுத்தியவர்
தமிழ்நாடு முதல்வர்!

பெரியாரைப் போல
எந்தப் பதவியிலும் இருந்திராத போதும்
அவர் மறைந்ததும்
அரசு மரியாதைக்கு
ஆணையிட்டதிலும்
உடல் அருகே நின்று
வீர வணக்கம்! வீர வணக்கம்!
தகைசால் தமிழருக்கு
வீர வணக்கம்! என்று
கை உயர்த்திக்
குரல் உயர்த்தியதிலும்
முதல்வரின் முகத்தில்
வெளிப்பட்டன்
தகைசால் தமிழரின்
மாண்பும்
தமிழ்நாடு முதல்வரின்
பெருமிதமும்!
கூடவே
நினைவுக்கு வந்தது
முதல்வரின் பெயரும்!



**அன்புடன்**
**ம.ரா.**

நன்றி: **கணையாழி**
மார்ச் 2026